## 4. தகவல் கோரல்.

முதலமைச்சர் அறையில் யாரோ ஒருவர் புகுந்து கண்ணாடிகளையும் இதர பொருள்களையும் சேதப்படுத்தியது குறித்து.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முக்கியமானதும் அவசரமானதுமான ஒரு தகவலைப்பற்றி நான் இங்கே தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களைக் கொலை செய்வதற்காக தமிழகத்தில் பலமுறை சதித்திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் இன்றையதினம் அவர் இருக்கும் அறைக்குள் யாரோ ஒருவர் புகுந்து அங்கேயுள்ள கண்ணாடிகளையெல்லாம் உடைத்து அங்குள்ள பொருள்களையெல்லாம் சேதப்படுத்தியதாகவும் அவர் அங்கே முதலமைச்சர் வருவார் என்று எதிர்பார்த்து இருந்ததாகவும், காவல் துறையினர் அவரைக் கைது செய்திருப்பதாகவும் தெரிகிறது. அவரைப் பைத்தியம் என்று சொல்கிறார்கள். இந்தத் தகவல்கள் எல்லாம் இந்த அவைக்குத் தெரியுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முக்கியமான பிரச்சினை ஒன்றை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டினுடைய முதலமைச்சருடைய அறையில் யாரோ புகுந்து எதையோ செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஏதாவது நடந்திருக்குமானால், அந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும். முதலமைச்சரைப்பற்றி முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், என்ன நடந்தது என்பதற்கு அரசு தரப்பிலே விளக்கம் சொல்ல வாய்ப்புத் தரவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய பேச்சு தடைப்பட்டுப் போயிற்று என்றாலும், முக்கியமான பேச்சு தடைப்பட்டுப் போவதற்குக்கூட நான் வருத்தப்படவில்லை. இவ்வளவு பெரிய பயங்கரமான நிலை நடந்திருப்பதற்காக என்னுடைய ஆழ்ந்த உணர்வுகளையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல வேளையாக இரவிலே நடைபெற்றிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் முழு நலத்தோடு வாழ்ந்து பல்லாண்டுகளுக்குப் பணியாற்ற வேண்டும் என்று என்னுடைய விருப்பத்தை, பிரார்த்தனையை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : முக்கியமான விவரம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் சொல்லியிருக்கிறார்கள். என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. தகவல் தெரிந்து சொன்னால், நாங்களும் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். முதலமைச்சர் அறையில் புகுந்து எப்படி கலாட்டா செய்தார் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இப்போது கோட்டைக் காவலே சீர்கேடு அடைந்திருக்கிறது. அதைத்தான் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அந்தந்தத் துறைகள் அதன் அதன் பணிகளைச் செய்வதில்லை. கோட்டையிலேயே இந்த நிலை இருந்தால், கோட்டையில் இல்லாமல் வெளியே இருக்கின்ற சாதாரண மனிதர்கள் எவ்வளவு பெரிய ஆபத்துக்களுக்கு ஆளாகிக் கொண்டிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அவையின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வருகிறேன். காவல் துறை சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை பலமுறை சொல்லியிருக்கிறோம். இப்படிச் சொல்வதற்குச் சரியான உதாரணமாகத்தான் இது நடந்திருக்கிறது என்பதை வேதனையோடு சொல்கிறேன். நாம் அத்தனை பேரும் உணர்கிற வகையிலே சான்றாக இது நடந்திருக்கிறது. இனிமேலாவது கட்சிகளைக் கடந்து நின்று நம்முடைய கடமைகளை நிறைவேற்றியாக வேண்டும் என்ற உணர்வை இந்தச் சம்பவத்தின் மூலமாக நாம் பெற்றாக வேண்டும்.

### 3. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிப்ரவரியிலே கொடுத்திருக்க வேண்டிய நிதிநிலை அறிக்கையை மார்ச் மாதக் கடைசியில் கொடுத்திருக்கிறார்கள் இந்த ஆட்சியாளர்கள். மதுவிலக்கைப் பொறுத்தவரையில் நிதிநிலை அறிக்கையில் கொஞ்சம்கூட வெட்கம் இல்லாமல் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். "இதனுடைய விளைவாக அரசுக்கு வர வேண்டிய வருவாய் எவ்வளவு என்று எங்களுக்குத் தெரியாது, அதைக் கணக்கிடவில்லை, அதற்கான முடிவுகளை எடுக்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த முடிவுகளை எடுக்கவில்லை என்பதோடு மட்டுமல்ல, கடைகளைப் பொறுத்தவரையில், லைசென்ஸ் (Licence) கொடுக்கப் போகிறோமா, அல்லது ஏலம் விடப்போகிறோமா என்று தெரிவிக்கவில்லை. அதைப் போலவே குடிப்பவர்களுக்கு பெர்மிட் சிஸ்டம் என்று சொல்லும் போது, 5 ரூபாய், 10 ரூபாய் அல்லது 25 ரூபாய் என்று வைக்கப்போகிறோமா அல்லது எப்படிச் செய்யப் போகிறோம் என்று முடிவு எடுக்கவில்லை. ஏற்கெனவே ஒரு மாதம் காலம் கடந்து நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்